DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C.No.112/2015

PROSECUTION WITNESS L.W.15/P.W.13

| | | | |
|---|---|---|---|
| Name | : நாட்ராயன் | Caste | : |
| Father's Name | : நாச்சிமுத்து | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**4,5 எதிரிகள் ஆஜர். (2, 3 எதிரிகள் ஆஜர் இல்லை. 2,3 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு – 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 19.06.2025

**குவிமுச பிரிவு 311 ன் கீழ் மனு எண். 10052/2024 தாக்கல் செய்யப்பட்டு 15.10.2024 ம் தேதி அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) இந்த வழக்கில் சாட்சியம் அளித்தது போல் பல்வேறு வழக்குகளில் நான் சாட்சியமளித்துள்ளேனா என்றால் கிராம நிர்வாக அலுவலர் என்ற அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளேன். இந்த வழக்கின் எதிரிகள் என்னிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகள் என்னிடம் சரணடையவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் எந்த இடத்தில் வைத்து பதிவு செய்யப்பட்டது என்றால் செங்கோட்டையான் மண்டபம் அருகில், பூந்துறை மெயின் ரோட்டில் வைத்து பதிவு செய்யப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலம் கையில் எழுதப்பட்டதா அல்லது கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலம் அந்த இடத்திலேயே பிரிண்ட் எடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். கணிணி, பிரிண்டர் ஆகியவற்றை ஆய்வாளர் அந்த இடத்திற்கு கொண்டு வந்திருந்தாரா என்றால் கொண்டு வந்திருந்தார். ரோட்டில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றாலும், அந்த இடத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, பிரிண்ட் எடுக்கப்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

2) அ.சா.ஆ.1 முதல் 4 வரையிலான ஆவணங்களை எதிரிகள் கையில் வைத்திருந்ததாக பொய்யாக சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன

தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றாலும், எதிரிகள் எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல. ஏற்கனவே போலீசாரால் தயாரிக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் பின்னிட்டு நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. போலீசார் சொல்வது போல் எதிரிகள் கைது செய்யப்பட்டிருந்தால் பொது மக்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டிருக்கும் என்றாலும், பொது மக்கள் சாட்சியாக கையொப்பம் செய்திருப்பார்கள் என்றாலும் சரியல்ல. அரசு தரப்பிற்கு நான் கையிருப்பு சாட்சி என்பதால் தான் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

**இல்லை.**

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

/sd/.R.Vanjinathan

Judicial Magistrate No.I,

Erode.